# நீலகண்ட பாடியத்தில் முப்பொருள் உண்மை

கலாநிதி. சோ. கிருஷ்ணராஜா

## அறிமுகம்

உபநிடதங்களின் பிழிசாறான அறிவுரை யாது என்ற வினாவிற்கு விடைதேடும் முயற்சியில் முகிழ்ந்ததே வேதாந்தம் என்ற மெய்யியற் போக்காகும். இதற்குரிய முதல்நூலாக பாதராயணர் என்பாரின் பிரமசூத்திரம் அல்லது வேதாந்த சூத்திரம் எனப்பெயர் பெறும் சூத்திரத் தொகுதியொன்று வியாஸர் என்பாரால் (வியாசர் = ஒழுங்கு செய்பவர்) தொகுக்கப்பட்டுள்ளது. பாதராயணரின் முதல்நூல் கி. பி. நாலாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பிரமசூத்திரம் மறைபொருளான அர்த்தங்களைக் கொண்டதனால், சூத்திரப் பொருள் யாது என்பதில் தோன்றிய கருத்துவேறுபாடுகள் பல்வகை வேதாந்த தரிசனங்களின் தோற்றத்திற்கு வித்திட்டன. பிரமசூத்திரத்திற்கு உரைகண்டோரில் சங்கரர், இராமாநுஜர், மத்துவர், ஸ்ரீகண்டர் என்போர் முக்கியமானவர்கள். இவர்களில் சங்கரரின் உரை அத்வைதம் என்ற வேதாந்த தரிசனத்தையும், இராமானுஜர், மத்துவர் ஆகியோர்களின் உரைகள் விசிஷ்டாத்வைதம் என்ற வேதாந்த தரிசனத்தையும், ஸ்ரீகண்டரின் உரை சிவாத்வைதம் என்ற தரிசனத்தையும் தோற்றுவித்தன.

சங்கரர் பிரமசூத்திரத்திற்கு மெய்யியலான விளக்கத்தை தனிமுதற்பொருளான பிரமத்தை ஆதாரமாகக் கொண்டு தந்தவர். கடவுள் கொள்கை சார்ந்த விளக்கத்தை அளித்தவர்களில் பிந்திய மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இராமானுஜரும் மத்துவரும் விஷ்ணுவை முதன்மைக் கடவுளாகக் கொண்டு பிரமசூத்திரத்திற்கு உரைகண்டனர். ஸ்ரீகண்டரோ சிவனைத் தலைமைக் கடவுளாகக் கொண்டு பிரமசூத்திரத்திற்கு உரை செய்தார். தனிமுதல் பற்றிய மெய்யியற் கொள்கையை கடவுட் சார்புடைய தனிமுதல்வாதமாக விளக்கமுயன்றமையே பிந்திய மூன்று உரைகாரரதும் சிறப்பியல்பாகும்.

இவர்களில் இராமானுஜரும், மத்துவரும் வைஷ்ணவ சமயநிலை நின்று விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்தனர். ஸ்ரீகண்டர் சைவசமய நிலை நின்று சிவாத்துவிதத்தை நிலைநிறுத்த முயன்றவராவர்.

---

*© மெய்யியற்றுறையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய இவர் சமூகவிஞ்ஞானங்களின் முறையியல் பற்றி தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டவர். விமரிசன மெய்யியல், தற்கால யாழ்ப்பாணத்து ஓவியர்கள் என்ற இரு நூல்களின் ஆசிரியராவர்.*

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் இயல்பையும் அவற்றிற்கிடையிலான உறவுகளையும் விளக்க முயல்வதே ஸ்ரீகண்டரின் பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியமாகும். சிவாத்துவித சைவபாடியம் 1907ம் ஆண்டில் காசிவாசி செந்திநாதையர் அவர்களால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது[2] இக்கட்டுரை காசிவாசி செந்திநாதையரால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட சிவாத்துவித சைவபாடியத்தில் காணப்படும் முப்பொருள் உண்மை பற்றி ஆராய முயலுகிறது.

## நூலமைப்பு

காசிவாசி செந்திநாதையரால் மொழிபெயர்க்கப்பட்ட ஸ்ரீகண்டரின் சிவாத்துவித சைவபாடியம் நான்கு அத்தியாயங்களைக் கொண்டதாய் ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்களைக் கொண்டதாய் அமைந்திருக்கின்றது. பூர்வபட்சம், சித்தாந்தம் என்றும், ஆட்சேபம் உத்தரம் என்றும் நூலானது வாதமுறையில் அமைந்துள்ளது. வேதாந்த சூத்திரங்களிற்கு விளக்கவுரை செய்கையில் பரபக்கக் கருத்துக்களைப் பூர்வபட்சமாக எடுத்துக்காட்டி அவற்றின் குறைபாடுகளைக் களையும் விதத்தில் சித்தாந்த விளக்கம் தரப்படுகின்றது. ஆங்காங்கே தெளிவற்றுக் காணப்படும் கருத்துக்களை ஆட்சேபம் என்று வினாத்தொடுத்து சித்தாந்த மரபிற்கிணங்கிய முறையில் உத்தரம் கூறப்படுகின்றது. ஆட்சேபங்களிற்கான உத்தரம் தரப்படுகையில் வேதங்கள், உபநிடதங்கள், பிரமாணங்கள், சங்கிதைகள் எனப் பலவாறாக மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன. தமிழ் மொழி பெயர்ப்பில் ஐயரவர்கள் சைவசித்தாந்த தத்துவத்திற்கு முரணாகக் காணப்படும் கருத்துக்கள் பலவற்றை விலக்கிவிட்டதாகக் குறிப்பிடுகின்றார்கள். அவரது அபிப்பிராயப்படி இந்நூலானது காலம் காலமாக ஏட்டுப்பிரதியாக இருந்ததினால் ஏகான்மவாதிகள் அத்வைத வேதாந்தக் கருத்துக்களை ஸ்ரீகண்டரின் கருத்தாக திரித்தெழுதிக் கொண்டனர்.

## நூலாசிரியர் காலம்

கி. பி. 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் உமாபதி சிவாச்சாரியார் ஸ்ரீகண்ட பாடியத்தின் நூலாசிரியர் நீலகண்டர் என்றே குறிப்பிடுகின்றார்[3]. 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீகண்டர் எக்காரணம் பற்றி நீலகண்டர் எனத் தமிழ் நூல் மரபிற் குறிப்பிடப்படுகின்றாரெனத் தெரியவில்லை.

''ஸ்ரீகண்டம்'' பாடியப் பெயராகவும் நீலகண்டர் நூலாசிரியர் பெயராகவும் இருக்கலாமென சூரியநாராயண சாஸ்திரிகள் அனுமானித்தாலும் மேற்படி ஊகம் பொருத்தமானதல்ல என அவரே ஒப்புக் கொள்கிறார். ஏனெனில் ஸ்ரீகண்ட பாடியத்திற்கு விருத்தியுரை செய்த அப்பையத் தீஷிதர் ''ஸ்ரீகண்ட ஆச்சாரியார்'' என்றே நீலகண்டரைக் குறிப்பிடுகின்றார்[4]. சிவாத்துவித சைவபாடியமான ஸ்ரீகண்ட பாடியத்தின் பிராரம்பப் பகுதியில் ''...வேதாந்த சூத்திரம் நீலகண்ட சிவாச்சாரியாரால் முற்றுவிக்கப்பட்டதென்றும், இவருக்கு ஸ்ரீகண்டர் என்ற திருநாமம் உண்டென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது[5]''. பேராசிரியர் இராதாக்கிருஷ்ணன் ஸ்ரீகண்டரை நீலகண்டரெனவே குறிப்பிடுகின்றார். பெயர் மயக்கத்திற்குக் காரண

மாகவிருக்கும் முக்கிய தகவல் ''கிரியாசாரம்'' என்ற நூல் நீலகண்டர் என்ற சிவாச்சாரியரால் எழுதப்பட்டதென்பதாகும்[6]. இந்நூலாசிரியர் 14 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். ஸ்ரீகண்டபாடியமும் இவராலேயே எழுதப்பட்டிருக்கலாமென்ற மயக்கமுமுண்டு[7]. அகோர சிவாச்சாரியார் ஸ்ரீகண்டரை நீலகண்டர் எனவே குறிப்பிடுகின்றார். இவர் 12 ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அப்பையதீஷிதர், சிவாத்துவித நிர்ணயம் என்றநூலில் ஸ்ரீகண்ட பாடியம் சங்கரபாடியத்திற்கு முற்பட்டதென்று குறிப்பிடுகின்றார். காசிவாசி செந்திநாதையரும் இவரைப் பின்பற்றி ஸ்ரீகண்டர் சங்கரருக்கு முந்தியவரெனவே குறிப்பிடுகின்றார்[8]. சங்கரர் 8 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவர். ''சங்கர திக்விஜயம்'' என்ற நூலில் காணப்படும் குறிப்பொன்றில், கோகர்ணம் என்ற மேற்குத் தொடர்ப்பகுதியில் தலைமைக் குருவாக இருந்த ஸ்ரீகண்டர் என்றொருவர் மெய்ப்பொருள் பற்றிய விவாதத்தில் சங்கரரால் தோற்கடிக்கப்பட்டார் என்ற செய்தி காணப்படுகின்றது. ஸ்ரீகண்டபாடிய நூலாசிரியரும் சங்கரரால் தோற்கடிக்கப்பட்ட ஸ்ரீகண்டரும் ஒருவரல்லரென சூரியநாராயண சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றார்[9]. இவரது கருத்துப்படி ஸ்ரீகண்டபாடிய நூலாசிரியர் காலம் ஏறக்குறைய 11 ம் நூற்றாண்டாக இருக்கலாம்[10]. காசிவாசி செந்திநாதையர் ஸ்ரீகண்டரின் காலம் பற்றிக் கூறும் கருத்துக்கள் பெரும்பாலும் அகச்சான்றுகளையே ஆதாரமாகக் கொண்டிருப்பதால் போதிய வலுவுள்ளதாகக் காணப்படவில்லை. மேலும் ஸ்ரீகண்டபாடியத்தில் ஆராயப்படும் சமயமெய்யியற் கருத்துக்களை நுணித்து நோக்கின் ஸ்ரீகண்டர் இராமானுஜருக்கு முன்பின்பாகவே வாழ்ந்திருத்தல்வேண்டுமென்ற முடிபிற்கு நாம் வரலாம். இராமானுஜர் காலம் 11 ம் நூற்றாண்டாகும். இதனடிப்படையில் ஸ்ரீகண்டரது காலம் பற்றிய சூரியநாராயண சாஸ்திரிகளது அபிப்பிராயம் ஏற்புடையதென்றே கொள்ளுதல் வேண்டும்.

## சைவசித்தாந்தமும் சிவாத்துவிதமும்

அப்பையதீஷிதர் ''சிவர்க்கமணிதீபிகை'' என்ற நூலில் ஸ்ரீகண்டரின் கொள்கையானது சாராம்சத்தில் அத்துவிதமேயென எடுத்துக் கூறுகின்றார். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட அத்துவிதம் சிவாத்துவிதம் என அழைக்கப்பட்டது. ஸ்ரீகண்டரின் சிவாத்துவிதமும் சைவசித்தாந்தமும் அடிப்படையில் ஒன்றே என்ற அபிப்பிராயத்தில் காசிவாசி செந்திநாதையர் அதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஆனால் சூரியநாராயண சாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி நீலகண்டரின் சிவாத்துவிதம் தமிழ்நாட்டுச் சைவசித்தாந்தக் கொள்கையிலிருந்து மாறுபட்டது[11]. உமாபதி சிவாச்சாரியார் ஸ்ரீண்ட பாடியத்தை பௌஷ்கர பாடியத்தினுள் மேற்கோளாகத் தந்தமை ஒருவகையில் ஸ்ரீகண்ட பாடியம் சைவசித்தாந்த மரபிற்கு ஏற்புடையதென்ற கருத்தைத் தருகின்றது. எனினும் சைவசித்தாந்த பசுவிலக்கணத்தில் ஆணவமலம் முக்கியமொரு இடத்தைப் பெறுகின்றது. ஆனால் ஸ்ரீகண்டரின் பாடியத்தில் ஆணவமலம் பற்றிய குறிப்புக்கள் எதுவுமில்லை. அத்துடன் ''ஆன்மா அணுவினனே''[12] என்றதொரு குறிப்பும் காணப்படுகின்றது. சைவசித்தாந்தம் ஆன்மா விபுவியல்பினது (= ஊடுபரந்தது) என்றே ஏற்றுக்கொள்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

## முறையியலடிப்படைகள்

ஸ்ரீகண்டரின் சைவபாடியமானது சைவசித்தாந்த அடிப்படைகளான பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களும், பிரமம் என்ற பௌதிகவதித எண்ணக்கருவில் உள்ளடங்குவதாகக் குறிப்பிடுகின்றது. பிரமம் முற்றறிவும், வரம்பிலா இன்பமும், சுவயம்பிரகாசமும், தன்வயமும், முடிவிலாற்றலும் உடையதென்பதனால் பதியாகவும்[13]. சேதனாசேதனத்துள்ளே பிரவேசித்து சத்தும் (பசுவும்). தியத்தும் (பாசமும்) ஆயினார்[14] என்பதனால் பிரமம் பசுவிலும் பாசத்திலும் வியாபித்துள்ளதென்றும் கூறப்படுகின்றது. முப்பொருளையும் பிரமமாக விளக்கும் மேற்படி பௌதிகவதீதச் சிந்தனை சத்காரிய வாதம் என்ற முறையியற் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது.

காரணமும் காரியமும் இருவேறு உள்பொருட்கள் அல்ல. மாற்றம் என்பது மாறுகின்ற பொருள் ஒன்றை உணர்த்துகிறது காரியம் அடிப்படையில் மாறுகின்ற பொருளிலிருந்து (காரணத்திலிருந்து) வேறானதல்ல என சத்காரியவாதத்தை நாம் சுருக்கமாக விளக்கலாம் இதன்படி காரணமும் காரியமும் பிரமமே. இதுவே உலகமாகவும் உயிராகவும் மாற்றமடைகிறதெனலாம். காரியம் காரணத்தில் உளதாதலின், அது காரணத்தினின்றும் அநன்னியம் என சத்காரியவாதத்திற்கு விளக்கம் தரும் ஸ்ரீகண்டர் இதனை இரு ஒப்புமைகள் மூலம் விளக்குகின்றார்[15].

ஒப்புமை ஸ்ரீகண்டரால் பயன்படுத்தப்படும் பிறிதொரு முறையியற் தத்துவமாகும். இந்திய அறிவாராச்சியியற் சிந்தனையில் ஒப்புமை பிரதானமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. ஒப்புமையைப் பிரமாணமாக - அறிவைப்பெறும் வாயிலாக, ஏற்றுக்கொள்ளாத மெய்யியற் கூடங்களும் பௌதீக வதித எண்ணக்கருக்களை விளக்குமிடத்து ஒப்புமையைப் பயன்படுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது. ''பால் தயிராதல்'', ''மண் கடமாதல்'' என்ற இரு ஒப்புமைகளையும் பிரமம் உயிராகவும் உலகாகவும் பரிணமிப்பதனை விளக்குவதற்கு ஸ்ரீகண்டர் பயன்படுத்துகின்றார். ''எங்ஙனம் க்ஷிரம் (பால்) ஒன்று தயிகின்றதோ, அங்ஙனம் காரணமொன்று காரியரூபமாகப் பரிணமிக்கநேரும்''[16] என்றும், ''கடம் முதலிய காரியமாக இருக்குமிடத்தும் மட்பொருள் கடமென்றறியப்படுகின்றது''[17] என்றும் பிரமத்தின் முற்றோருமை பற்றிய விளக்கம் தரப்படுகிறது. புலனனுபவத்தினால் அறிந்துணரப்படக்கூடிய மேற்படி இரு ஒப்புமைகளும் காரியமும் காரணமுமாகிய பிரபஞ்சமும் பிரமமும் ஒரே வஸ்து என எடுத்துக்காட்டுவதற்கும், சிவபெருமானே காரணமும் கார்யமுமென எடுத்துக்காட்டுவதற்கும் ஸ்ரீகண்டருக்கு உதவுகிறது. சத்காரியவாதமும், ஒப்புமையும் இரு பிரதான முறையியற் தத்துவங்களாக, பிரமத்தின் பரிணாமமே உலகும் உயிரும் என விளக்குகிறது. பிரமம் மட்டுமே உள்பொருளாயின் உலகும் உயிரும் இல்பொருளாதல் வேண்டும். ஆனால் இவ்விரு பொருளும் இல்பொருளெனக் கொள்ளுதல் சித்தாந்த மரபிற்கு ஏற்புடையதல்ல. சத்காரியவாதத்தை ஏற்பதால் மட்டுமே முப்பொருள்களிற்கும், பிரமத்திற்குமிடையிலான முரண்பாட்டைத் திர்க்கலாம். ஒப்புமையானது பிரமத்தின் பரிணாமமாக முப்பொருளும் எவ்வாறு விளக்கப்படலாமென்பதை அறிவாராச்சியியலடிப்படையில் எடுத்துக்காட்டுகிறது.

## பிரமமாகிய பதி

வேதாந்த வாக்கியங்கள் குறித்து நிற்கும் பிரமம் சிவபெருமானாகிய பதியே என எடுத்துக்காட்டும் ஸ்ரீகண்டர், பதியானவர் எவ்வாறு அறியப்படுவார் என்ற வினாவிற்கு சுருதியே ஒரேவழியென விடைதருகின்றார். கேட்டல், சிந்தித்தல், முதலியவற்றினால் பதியின் இருப்பை ஒருவர் நிச்சயித்துக் கொள்ளலாமெனினும், சுருதிப் பிரமாணத்தினாலேயே அவர் அறியப்படுவார். ''வேதாந்த சாத்திரமொன்றினாற்பெறப்படுபவரும், அந்த வேதாந்தப் பிரமாணமொன்றினாலேயே தாபிக்கற் பாலரும் பரப்பிரம சிவபெருமான் எனச் சித்தமாயிற்று''.[18]

காட்சி, அனுமானம், சுருதி என்ற மூன்றும் சைவசித்தாந்தத்தின்படி அறிவைப் பெறுதற்குரிய வழிமுறைகளாக எடுத்துக்காட்டப்பட்டாலும், புலக்காட்சியும் அனுமானமும் பதியை அறிதற்குரிய பிரமாணமாக மாட்டாதென்பது சித்தாந்தத்தின் நிலைப்பாடு. ஸ்ரீகண்டபாடியத்திற்கு பின்னாக 13 ம் நூற்றாண்டில் எழுந்த சிவஞானசித்தியாரில் வாயிற்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சியென நான்கு வகையாக வகைப்படுத்தப்பட்டு விளக்கப்படும் காட்சிக் கொள்கையில் யோகக் காட்சி பதியை உணரத்தகுந்த நற்காட்சி என ஒருவரால் அனுமானிக்க முடியும்[19]. எனினும் சிவாத்துவித சைவபாடியத்தில் காட்சி பற்றிய குறிப்புக்கள் எதனையும் ஸ்ரீகண்டர் தரவில்லை.

அனுமானப் பிரமாணத்தினால் பதியின் இருப்பை அறியமுடியாதென்பது சைவசித்தாந்திகளனைவரும் ஏற்றுக்கொண்டதொரு முடிபு. ஸ்ரீகண்டருக்கும் இக்கொள்கை உடன்பாடானதேயாம். பதியின்இருப்பை அனுமானப் பிரமாணத்தினாற் பெற இயலாதென்பதற்கு சிவாத்துவித சைவபாடியம் பின்வரும் நியாயங்களைத் தருகின்றது.

1. விசித்திரத் தொழில்கள் (பல) பூண்ட (ஆலயக்) கோபுரம், பிரசாத முதலியன அனேக கருத்தாக்களையுடையனவாகக் காணப்படலான், அதுகொண்டு பிரபஞ்சம் தனக்கு வாய்ந்ததோர் கருத்தாவை உடையதென அனுமானித்தல் உசிதமல்ல[20].

2. அனுமானத்தினால் ஒரு கருத்தா உண்டெனக் கொண்டாலும், அக்கருத்தா கர்மமுதலிய வற்றினாற் றொடக்குண்டவனாக அறியப் படுவார்.[21]

3. ஏதுவின் பக்க தர்மானுமான வாயிலாகப் பிரபஞ்சத்திற்கு வரை விலக்சணமாகக் கருத்தாக ஒருவன் உளனாகச் சிந்தித்தாலும் நிமித்தோபாதான சக்தியோடியைந்த ஒரே கர்த்தா உளன் எனச் சாதித்தல் முடியாது[22].

அனுமானம் காரணகாரியத் தொடர்பை ஆதாரமாகக் கொண்டது. இதன்படி காரியத்திலிருந்து காரணத்தை அனுமானிக்கும் முறையைக் காரியானுமானமென இந்திய தருக்கநூலர் அழைப்பர். புலனனுபவத்திற்குட்பட்ட விடயங்களிற்கே மேற்படி அனுமானக் கொள்கை பயனுடையது. பௌதிகவதீத கருத்தாக்கங்களிற்கு இதனைப் பிரயோகிப்பதால் பெறப்

படும் முடிவுகள் திருப்திகரமானதாயிராதென்ற முறையிலேயே பிரபஞ்சத்தைக் காரியமாகக் கொண்டு அதன் காரணமாக அனுமானப் பிரமாணத்தினால் பிரமத்தை பெறமுடியாதெனக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் காரணத்திலிருந்து காரியத்தை சத்காரியவாதமாக ஊய்த்தறிய முடியுமென்பதை சித்தாந்தம் எடுத்துக் காட்டுகின்றது ''சிவபெருமான் உபாதானகாரணராகிய பிரபஞ்சசாரமாயும், நிமித்த காரணராகி பிரபஞ்சோற்பத்தி செய்பவராகவும் உள்ளார்'' [23]. என்றும், ''சிவபெருமான் தாமே உலகாதாரமாதலோடு கர்த்தாவாதலும் பெறப்படுகிறது.[24] என்றும் கூறப்படுகின்ற கருத்துக்கள் சத்காரிய வாதம் தருக்க விதியாக அல்லாது முறையியற் தத்துவமாகவே பௌதிகவதித உண்மைகளை நிறுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றதென்பதைத் தெளிவாக்குகிறது. சத்காரியவாதம் ஒரு தருக்கக் கொள்கையாயின், அனுமானம் சகல மட்டங்களிலும் அறிவைப் பெறுதற்குரிய ஏற்புடைய வழிமுறையாக இருத்தல் வேண்டும். ஆனால் புலன்கடந்த விடயங்களிற்கு சுருதியே பிரமாணமாதலினால் சத்காரியவாதம் தருக்கக் கொள்கையாக இருக்க முடியாதென்பது வெளிப்படை.

சுருதிப் பிரமாணத்திலேயே சிவன் அறியப்படுவார் என ஏற்றுக் கொள்ளும் சிவாத்வைத சைவபாடியம்; அவர் முற்றறிவு, வரம்பிலா இன்பமுடமை, இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியதன்மை, தன்வயமுடமை, பேரருளுடமை, முடிவிலா ஆற்றலுடமை என்கின்ற குணாதிசயங்களைக் கொண்டவரென்றும் [25]; சத்தியம், ஞானம், ஆனந்தம் என உடன்பாட்டானும், நிர்குணம், நிஷ்களம், ஸ்தூலமன்று, அணுவன்று என ,எதிர்மறை முகத்தானும் கூறப்படும் இரு இலட்சணங்களை உடையவர் எனக் கூறப்படுகிறது.[26]

## பிரமமும் ஆன்மாவும்

பதியின்றும் வேறானதும், தனியானதுமான இருப்புடைய ஆன்மாவானது பிறப்பதுவுமில்லை, இறபபதுவுமில்லை. தன்னியல்பில் அறிவுடையது சுயமாகவே செயற்படும் இயல்பினது. ஸ்ரீகண்டர் ஆன்மா சுயமாகவே ஞாதாவென்றும் (=அறிவுடைய தென்றும்) [27], அதற்கு சுயாதினப் பிரவிருத்தியுண்டென்றும் [28] கூறுகின்றார். பசுத்துவமுடமையினால் பசு என அழைக்கப்படும் ஆன்மாவானது நல்வினை தீவினை என்ற கன்மங்களைப் புசிப்பதால் பசுவாக உருவகப் படுத்தப்படுகிறது. கன்மத்தைப் புசிக்கும் ஆன்மாவும், பதியும் பற்றி விளக்குகையில் ஸ்ரீகண்டரால் முண்டக உபநிடதத்தில் வருகின்றதொரு வாக்கியம் மேற்கோளாகத் தரப்படுகின்றது. ''பிரியா நட்புடைய அழகுடைய பட்சிகள் இரண்டு ஒரே மரத்தில் இசைந்துள்ளன; அவற்றில் ஒன்று இனிய பழத்தை உண்ணுகிறது; மற்றது உண்ணாது பார்த்துக் கொண்டிருக்கிறது'' [29]. பசுவானது வினைவசத்தால் கன்மத்தைத் தூய்க்க, பதி அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றதென மேற்படி வாக்கியத்திற்கு விளக்கம் தரப்படுகிறது.

ஆன்மா கன்மத்தைத் துய்ப்பதற்கு (=அனுவிப்பதற்கு) காரணமென்ன என்பதற்குச் சிவாத்துவித சைவபாடியம் தரும் பதில்: அது அநாதியாயுள்ள அஞ்ஞான வாசனையினாற் பற்றப்பட்டமையே என்பதாகும்.

"அஞ்ஞான வாசனையினால் பற்றப்பட்டு நானாவித ..... சரீரங்களிற் பிரவேசித்தலும், நீங்குதலுமாகிய வியாபாரத்தினால் வசப்பட்டு எல்லையில்லாத துன்பத்தை ஆன்மா அனுபவிக்கின்றது"[30] துன்பத்தை அனுபவித்தல் சிவத்துவம் என அழைக்கப்படும். மல வக்கத்தினால் ஆன்மாக்களிற்கு பசுத்துவ நிவர்த்தி ஏற்படுகின்றது. இதனால் சிவத்துவம் உண்டாகிறது[31].

பசுத்துவ நிவர்த்தியும் சிவத்துவமும் ஆன்மாக்களிற்கு எவ்வாறு ஏற்படுகின்றதென்பது இரு ஒப்புடைகளால் விளக்கப்படுகிறது. 1 சந்திரனை மறைக்கும் முகில் நீங்கியவிடத்து அது தூயதாய் விளங்குதல் போல . திரோதன மலம் நீங்குதலே சுத்தியாகும்[32] 2. குதிரை தன் உரோமங்களை உதறுவது போல பாவம அனைத்தையும் ஆன்மாவானது உதறிப் பின்னர் தன் சரீரத்தையே உதறி புண்ணிய பாவ விமோசனம பெறுகிறது[33]. ஆன்மா அறிவுடையதனால் தன் முயற்சியாலும், பதியின் அனுக்கிரகத்தினாலும் மலநீக்கத்தைப் பெறுகிறது. சிவத்துவம் அடைதலே ஆன்மா விளையும் பெறுபேறாகும். அதாவது முத்திநிலையில் ஆன்மா பிரமமாகிறது. முத்தியினால் ஆன்மா பிரமத்துடன் ஏற்படுத்திக் கொள்ளும் முற்றோருமை பற்றிய சைவசித்தாந்த விளக்கம் சமயநோக்கு நிலையில் இயைபுடையதொன்றாகும். ஆன்மா என்றும் ஆன்மாவே என்ற நிலை சித்தாந்த சைவத்தில் இறுதிவரை பேணப்படுகின்றது. 'பிரமத்தை அறிபவன் பிரமமாகவேயாகிறான்'' என்ற மகா வாக்கியத்திற்கு சிவாத்துவித சைவபாடியம் தரும் விளக்கம் பிரமசாமீயமே ஒழிய வேறல்ல[34]

சிவத்துவப் பிராப்திக்காக பசுத்துவ நிவர்த்திக்கான மார்க்கங்களைத் தேடும் ஆன்மாவானது சிவோகம் பாவனையிலீடுபடுகிறது. அக்கினியிற் பட்ட பஞ்சுபோல உபாசனையினால் பாவங்களெல்லாம் எரிந்து போகிறது. ஆன்மாவின் ''பாவப் பிரவாகத்தினாலே பாசம் இழக. அதனால் பசுத்துவம் நீங்கிய உபாசகன் சிவனேயாகின்றான், என சிவாத்துவித சைவபாடியம் கூறுகிறது[35].

## பிரமமும் மாயையும்

மாயைபற்றிய சொல்லாடலில் ஸ்ரீ கண்டர் பிரபஞ்சத்தின் தோற்றம் அதன் இயல்பு, பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்குமிடையிலான தொடர்பு என்பன பற்றியே ஆராய்கிறார். ஆன்மாவைத் தொடர்புபடுத்திய மாயை பற்றிய ஆய்வுகள் சிவாத்துவித சைவபாடியத்தில இடம் பெறவில்லை. ''மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேஸ்வரர் என்றும் அறிக'' என்ற சுவேஸ்தார உபநிடதத்தின் சுலோகம் ஒன்றை மேற்கோளாக எடுத்துக்காட்டி, மாயையை ஆதாரமாகக் கொண்டு உலகம் சிவனால் படைக்கப்பட்டதென ஸ்ரீகண்டர் கூறுகின்றார். சிவாத்துவிதத்தில் சத்காரிய வாதம் என்ற காரணகாரியத் தொடரில் காரணம் என்ற எண்ணக்கரு உபாதான காரணம் அல்லது ஆதிகாரணம் என்றும், நிமித்த காரணம் அல்லது செயற்படு காரணம் என்றும் இரு கூறுகளின் தொகுதியாக விளக்கப்படுகிறது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல காரணத்தின் (– பிரமத்தின்) ஒரு புறமும் ஆதிகாரணமாகவும், மறுபுறம் நிமித்தகாரணமாகவும் உலகம் விளக்கப்படுகிறது. பிரமமே மாறுகின்ற பொருள் மாற்றமடைந்த பொருள் உலகு. இரண்டும் அடிப்படையில் இருவேறு உள்

பொருள்கள் அல்ல எனக் காட்டுவதன் மூலம் ஸ்ரீகண்டர் ஒருமைவாதத்தை நிலை நிறுத்துபவராகக் காணப்படுகின்றார். புலனனுபவத்திற்குரிய ஆதாரம் ஒன்றிலிருந்து தரப்படும் ஒப்புமை ஒருமைவாதத்திற்குரிய விளக்கமாகத் தரப்படுகிறது. ''குலாலன் கடத்தை உண்டாக்குங்கால் மட்கட்டி குலாலன் சரீரத்திற்கு வேறாய்க் கடத்திற்கு உபாதானமாய்க் காணப்படுமாறு போல மாயையைக் கொண்டு சிவன் உலகைப் படைத்தான் 36.

பிரமமாகிய சிவன் உலகைப் படைத்தாலும் உலகிலிருந்து தான் வேறுபடுபவன் அல்ல என்பதற்கு (தானே) ''சேதனாசேதன காரிணமாக பரிமாணமுறுகல்'' என்ற விளக்கம் தரப்படுகின்றது 37. பிரபஞ்சமானது நாமரூப விசேஷமின்றி ஸ்தூல சூக்கும சேதனாசேதனமாகிய சத்து அசத்தின் வியக்தி நிலையற்று, இருந்த காலை அந்தச்சிவபிரானார் அத்துவிதீயராய், கேவலராய், சுவப்பிரகாசராய், தம்மினின்றும் பகுக்கப்படா வியல்புடைத்த சேதனாசேதனச் சக்தியோடுளராயினர் 38. என்றும், சிருட்டியினாலேயே எல்லாம் நாமரூபடைந்தன எனினும் அவையனைத்திலும் பிரமம் அத்துவிதமாய் மறைந்து கிடக்கின்றது என்றும் சிவாத்துவிதம் ஏற்றுக்கொள்கிறது. அதாவது சிவாத்துவிதத்தின் ஒருபார்வையின்படி பிரமம் தானே பிரபஞ்சமாகப் பரிணாமமுறுகிறது. மறுபார்வையில் அதே பிரமம் உபாதன காரணராகிப் பிரபஞ்சாகாரமாயும், நிமித்த காரணராகிப் பிரபஞ்சோற்பத்தி செய்பவராகவும் உள்ளார். 39

## அடிக்குறிப்புகள்

1. ஹிரியண்ணா எம், இந்திய தத்துவம் 2 ம் பாகம். (தமிழ்மொழி பெயர்ப்பு), தமிழ்வெளியீட்டுக்கழகம்; தமிழ்நாடு 1968, பக். 183.
2. நீலகண்டரின் பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம். மொழி பெயர்ப்பு காசிவாசி செந்திநாதையர், செந்திநாத சுவாமி யந்திர சாலை, திருமங்கலம், 1907.
3. Suryanarayana Sastri S. S., Sivadvaita of Sri-kantha; University of Madras 1930, P.33.
4. Ibid. P. 33
5. பிரமசூத்திர சிவாத்துவித பாடியம்; மு. கு. பக். 142.
6. Suryanarayana Sastri S. S, op.cit, p. 18.
7. பேராசிரியர் இராதாக்கிருஷ்ணன் நீலகண்டர் 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தவரேன்று கூறுவதன் மூலம் கிரியாசாரம் எழுதிய நீலகண்டரே பிரமசூத்திர உரையாசிரியர் என்று மயங்குவதாகத் தெரிகிறது. பார்க்க: Radhakrishnan, Indian Philosophy Vol. 2 (9th impression 1971): George Allen & Unwin Ltd. P.723-24.
8. பிரமசூத்திர சிவாத்துவித பாடியம்; பக். 12
9. Suryanarayana Sastri, op. cit. 12

10. Ibid. P. 27
11. Ibid. P. 22
12. பிரமசூத்திர சிவாத்துவித பாடியம். பக். 399
13. மே. கு. பக். 5 0.
14. மே. கு. பக். 329
15. மே. கு. பக். 344.
16. மே. கு. பக். 351
17. மே. கு. பக். 343
18. மே. கு. பக். 170
19. வை. இரத்தினசபாபதி (பொதுப் பதிப்பாசிரியர்), மெய்கண்ட சாஸ்திரங்கள்; சென்னைப் பல்கலைக்கழகம், 1988, பக். 106.
20. சிவாத்துவிதபாடியம், பக். 170
21. மே. கு. பக். 170
22. மே. கு. பக். 170
23. மே. கு. பக். 327
24. பே. கு. பக். 328
25. மே. கு. பக். 155
26. மே. கு. பக். 123
27. மே. கு. பக். 398
28. மே. கு. பக். 407
29. மே. கு. பக். 266
30. மே. கு. பக். 154
31. மே. கு. பக். 261
32. மே. கு. பக். 194
33. மே. கு. பக். 506
34. மே. கு. பக். 617
35. மே. கு. பக். 571
36. மே. கு. பக். 241
37. மே. கு. பக். 241
38. மே. கு. பக். 338 39
39. மே. ப. பக். 327